**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**EA.No.13/2024 in EP.No.1/2017- PW-1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.விஜயராஜ் | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.ஏ.பி.கன்னியப்பன் | Occupation | விவசாயம் |
| Village /Area | அம்மூர் | Age | 50 |
| Taluk | வாலாஜா தாலுக்கா | Aadhar Card No. | 7481 9688 0392 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.08.2025.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். 25.03.1990 தேதியில் பொன்னுசாமி என்பவர் எனக்கும், என் சகோதரருக்கும் கூட்டாக 6-வது இனச்சொத்து சம்மந்தமாக எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயிலின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆகும். 27.04.2001 தேதியில் ஏ.பி.கன்னியப்பன் என்பவர் எனக்கும், என் சகோதரருக்கும் 2-வது இனச்சொத்து பொறுத்து கூட்டாக எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயிலின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2** ஆகும். 22.09.2022 தேதியில் என் பெயரிலும், என் சகோதரரின் பெயரிலும் கூட்டாக உள்ள 2-வது இனச்சொத்துக்கான அம்மூர் கிராம கணினி பட்டா எண்.1922 இணையதள நகல் **ம.சா.ஆ.3** ஆகும். 22.09.2022 தேதியில் என் பெயரிலும், என் சகோதரரின் பெயரிலும் கூட்டாக உள்ள 2-வது இனச்சொத்துக்கான அம்மூர் கிராம கணினி பட்டா எண்.1923 இணையதள நகல் **ம.சா.ஆ.4** ஆகும். 27.01.1994 பொன்னுசாமி என்பவரின் இறப்பு சான்று **ம.சா.ஆ.5** ஆகும். 07.06.2006 கன்னியப்பன் என்பவரின் இறப்பு சான்று **ம.சா.ஆ.6** ஆகும். 2-வது இனச் சொத்தை ஒட்டியுள்ள புல எண்.413-க்கான வழிகாட்டி மதிப்பு பட்டியல் பதிவிறக்கம் செய்யப்பட்டது **ம.சா.ஆ.7** ஆகும். 10.09.2023 தேதியில்

பதிவிறக்கம் செய்யப்பட்ட இனம் 2, 4 மற்றும் 6–க்கான வழிகாட்டி மதிப்பு **ம.சா.ஆ.8** ஆகும். 6–வது இனச் சொத்துகளுக்கான வழிகாட்டி மதிப்பு பட்டியல் பதிவிறக்கம் செய்யப்பட்டது **ம.சா.ஆ.9** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2025.08.14 00:07:13 +0530

I Additional District Judge,
Ranipet.